17.10.2025

DVOP.14/2021

RW-1. வெங்கடேஷ்கண்ணன்

(மனுதாரர் ஆஜர். எதிர்மனுதாரர் ஆஜர். மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பி.ஏ.டிப்ளமோ பயர் அன்டு சேப்டி படித்துள்ளேன். திருமணத்தின் போது நான் சுகுனா சிக்கன் கோழிப்பண்ணை பெங்களூரில் வைத்திருந்தேன். திருமணம் முடித்து 1 முதல் 6 எதிர்மனுதாரர்களுடன் கூட்டுக்குடும்பமாக எங்கேயாவது வசித்து வந்தேனா என்றால் பெங்களூரில் நானும் எனது மனைவியும் மட்டும் வாழ்ந்தோம். மனுதாரர் கர்ப்பம் தரித்தவுடன் 2 முதல் 6 எதிர்மனுதாரர்களின் வீட்டில் தான் வசித்து வந்தார்எ ன்றால் சரிதான். அப்போதும் எனது வருமானத்தை வைத்து தான் எனது குடும்பத்தை பார்த்தேன். 2ம் முறை எனது மனைவியிடம் 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள் பெண் குழந்தை என்றால் வேண்டாம் என்று சொன்னார்களா என்றால் சரியல்ல. 2வது குழந்தை கர்ப்பம் ஆனவுடன் பிரச்சினை என்றால் இல்லை. அதற்கு முன்பே ஏற்பட்டுவிட்டது. எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விஷயங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். எனது நிரூபண வாக்குமூலத்தில் எனது மனைவிக்கும் எனது குழந்தைக்கும் மாதம் மாதம் பராமரிப்பு தொகை செலுத்தி வருகிறேன் என்று சொல்வதற்கு எதும் ஆவணங்கள் தாக்கல் செய்தேன் என்றால் இல்லை. ஆனால் சமூகநலத்துறை அலுவலகத்தில் நடந்த விசாரணையில் சமர்பித்துள்ளேன். எனது மனைவி என் மீது சமூகநலத்துறையில் புகார் அளித்தார். அந்த விசாரணையில் நான் ஆஜராகிவில்லை என்று சொன்னால் ஆஜராகி வாக்குமூலம் கொடுத்து கவுன்சிலிங்க்கு வந்திருந்தேன்.

எனது நிரூபண வாக்குமூலத்தில் எனது மனைவி சின்னச்சாமி என்பவருடன் பேசியதாக சொன்னேன் என்றால் சரிதான். அதுகுறித்து நான் எவ்வித புகாரும் கொடுக்கவில்லை. சமூகநலத்துறையிலும் அதுகுறித்து நான் எதுவும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அதனை நான்

தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். எனக்கு 2 பெண் குழந்தைகள் பிறந்ததால் தான் எனது மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்து வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனது மூத்த மகளுக்கு புனித நீராட்டு விழாவிற்கு என்னை அழைத்தும் நான் வேண்டும் என்றே மனுதாரரை அசிங்கப்படுத்துகிறேன் என்றால் சரியல்ல. நான் மனுதாரரையும் எனது குழந்தைகளையும் சட்டப்படியாக பராமரிக்க வேண்டிய கடமையுள்ளது என்று சொன்னால் அவர்கள் சேர்ந்திருந்தால் பராமரித்திருப்பேன். மனுதாரரின் 10 பவுன் நகைகளை நான் திருமங்கலத்தில் அடகு வைத்து குடித்து அழித்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்குதாக்கல் செய்ததிலிருந்து எனது மனைவிக்கும் குழந்தைக்கும் எவ்வித பராமரிப்பும் நான் செய்யவில்லை என்றால் சரிதான்.

மனுதாரரும் பலநபர்களை வைத்து சேர்ந்து வாழ்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்களா என்றால் சரியல்ல. நான் தான் நடவடிக்கை எடுத்து வருகிறேன். நான் சேர்ந்து வாழ்வதற்கு எதாவது வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நானும் எனது குடும்பத்தாரும் மனுதாரரை கொடுமைப்படுத்தியதால் தான் அவர் பிரிந்து வாழ்ந்து கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார். மனுதாரர் மனுவை அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறார் என்றால் சரியல்ல.